மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: முடிவுகளின் நகல்* பேரவையில் வைக்கப்படுகிறது.

காவிரிப்பூம்பட்டினம்

*243 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் காவிரிப்பூம்பட்டினத்தை யாத்ரீகர் ஸ்தலமாக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இத்தகைய உத்தேசம் எதுவும் தற்போது சுற்றுலாத் துறையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இன்றைய தமிழக அரசு பண்டையக் காவிரிப்பூம்பட்டினத்துச் சிறப்புகளை நினைவு படுத்துகின்ற வகையில் பல நல்ல காரியங்களை மேற்கொண்டு வருவதைச் சுட்டிக்காட்டி அதையொட்டி அந்த இடத்தை யாத்ரிகர் ஸ்தலமாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான், அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லையென்று சொன்னேன். அதனுல் பிறகு எடுத்துக்கொள்ளப்படலாம்.

Soil Testing Laboratory at Salem

*244 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state

(a) Whether the Government has decided to set up a soil testing laboratory at Salem this year; and

(b) What will be its work and activities?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இது அரசின் ஆலோசனையில் உள்ளது.

(இ) மண்வளச் சோதனை ஆய்வுக் கூடம் அமைக்கப்படின், அதன் அலுவல்கள் வருமாறு—

(1) உழவர்களின் நிலங்கள் எந்த அளவுக்கு வளம் செறிந்தது என்பதைக் கண்டறிதல்.

(2) அதிகமான விளைச்சலைப் பெறும் நோக்கத்துடன் மிகச் சிக்கனமான முறையில் வேண்டிய அளவுக்குக் கூடுதலான உரங்களைப் பயன்படுத்துதல்.

(3) மண்ணில் அமில காரணம் போன்ற தீங்கு பயக்கக் கூடிய தன்மை உள்ளனவா எனக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கான தகுந்த வழிகளைக் கூறுதல்.

(4) கிராம அளவில் நிலவள தரைப்படம் வரைதல்.

---

* 172–174-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.